திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தமிழ் நாட்டில் இருக்கிற பள்ளிக் கூடங்களில் பல இடங்களில் அறிவியல் ஆய்வுக் கூடங்கள் இல்லாமல் இருக்கின்றன. இந்தக் குறையைப் போக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரையில் இது வரையில் 810 உயர் நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் சாதனங்கள் வாங்கவும் ஆய்வுக் கூடக் கட்டடங்களுக்கு உதவி மானியமாகவும் அளிக்கப்பட்டுள்ளன. 1974–75–ஆம் ஆண்டில் மேலும் 55 உயர் நிலைப் பள்ளிகளுக்கு இம்மானியம் வழங்கப் படும். மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் உயர்நிலைப் பள்ளிகளுக்குத் தேவையான எல்லா அறிவியல் கருவிகளும் கொண்டுள்ள 17 ஆய்வுக் கூட இயல் ஊர்திகள் இயங்குகின்றன. மேலும் 8 ஊர்தி வண்டிகள் 1975–76–ம் ஆண்டில் வாங்கப்படும்.

நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கு அவசியமான முறையில் விளக்கம் அளிக்கும் பொருட்டு சில அறிவியல் சாதனங்கள் வாங்குவதற்காக தொடக்கப்பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 1,000 வழங்குவது என்ற அடிப்படையில் அறிவியல் சாதனங்களும் ஏனைய கல்விச் சாதனங்களும் வழங்கும் திட்டம் 1960-ல் தொடங்கப்பட்டது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் 11,400 தொடக்கப்பள்ளிகளும் 3,000 உயர் தொடக்கப்பள்ளிகளும் பயன் அடைந்துள்ளன. 1975–76–ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தின் கீழ் 1,220 தொடக்கப்பள்ளிகளும் 334 உயர்தொடக்கப்பள்ளிகளும் பயன் பெறும்.

நொய்யல் நீர்த் தேக்கத் திட்டம்.

*584 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கரூர் தாலுக்காவில் நொய்யல் நீர்த்தேக்கத் திட்டம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இத் திட்டத்திற்கான விரிவான ஆய்வு தலைப் பொறியாளர்களால் நடத்தப்பட்டு வருகிறது.

Silt excluder in Grand Anicut.

* 585 *Q.*—THIRU G. ILANGOVAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to put up a silt excluder at the head reach of Grand Anicut channel ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) நீரியல்-நீர்ப் பண்பியல், பூண்டி நிறுதனத்தில் மாதிரி ஆய்வுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. பெ. சீனிவாசன் : தமிழ் நாட்டில் இருக்கிற ஏரிகளில் இன்னும் சில்ட் கிளியரன்ஸ் தொடங்கப்படவில்லை. அரசாங்கம் இதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யுமா ?